வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 10.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திருச்சியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைக்க உள்ளார்.

பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955-ன் கீழ் கொண்டு வரப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதுச்சேரியில் சர்வதேச தேசிய மற்றும் மண்டல அளவில் விருதுகள் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பணப் பரிசுகள் வழங்கினார்.

மோடி- தமிழ்நாடு

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திருச்சியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து அடிக்கல் நாட்ட உள்ளார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு ..................

(வாய்ஸ்)

நாளை தமிழ்நாட்டிற்கு வருகை தரும் பிரதமர் திரு நரேந்திர மோடி,. நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட் சார்பில் அமைக்கப்படும் 3 ஆயிரத்து 680 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நகர எரிவாயு விநியோக கட்டமைப்பிற்கு அடிக்கல் நாட்டுகிறார். மேலும் சென்னை மணலியில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் தொழிற்சாலை எந்திரங்களுக்கான எண்ணெய் தயாரிப்பு ஆலையை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 370 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை திறந்து வைக்கிறார். மேலும் கங்கை கொண்ட சோழபுரம் அருகே பசுமை பாதை புறவழிச் சாலைக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். அதனைத் தொடர்ந்து 2 அமிர்த பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் உட்பட 5 புதிய ரயில் சேவைகளையும் அவர் கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார்.

மோடி-படை தினம்

மத்திய தொழிலக பாதுகாப்பு படை நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு துணைத் தலைவர் , பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்

பதிவில் நாட்டின் பொது துறை நிறுவனங்களை பாதுகாப்பதில் மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் பங்கு பாராட்டத் தக்கது என்று தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் நாடு முழுவதும் உள்ள முக்கித்துவம் வாய்ந்த உள்கட்டமைப்பை பாதுகாப்பதில் மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் பங்கு அளப்பரியது என்றும் தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக உயிர் தியாகம் செய்த மத்திய தொழிலக பாதுகாப்பு படை வீரர்களுக்கு தலை வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

*சட்டம்-அமல்*

பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு அதனை அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955-ன் கீழ் கொண்டு வந்துள்ளது. மேற்காசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக உள்நாட்டில் பெட்ரோல், எரிவாயு, உள்ளிட்ட பொருட்களுக்கு நெருக்கடி ஏற்படக் கூடும் என்பதால் பெட்ரோலியப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று மத்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது. நாடு முழுவதும் எரிவாயு உள்ளிட்ட பெட்ரோலியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும்

வகையில் இதற்கான சட்டம் உடனடியாக அமல்படுத்தப் பட்டிருப்பதாகவும், மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஓம் பிர்லா*

மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முதல் ஒத்தி வைப்பிற்கு பிறகு பிற்பகல் 12 மணிக்கு அவை கூடிய போது காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் முகமது ஜாவேத் இந்த தீர்மானத்தை முன் மொழிந்தார். அப்போது சபையின் அனைத்து உறுப்பினர்களின் நம்பிக்கையை பெறும் வகையில் பாரபட்சமற்ற முறையில் செயல்பட திரு ஓம் பிர்லா தவறிவிட்டார் என்று தெரிவித்தார். இந்த தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு 10 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவையை நடத்தும் அலுவலர் திரு ஜெகதாம்பிகா பால் உறுப்பினர்களிடம் கூறினார். விவாத த்தை தொடக்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் கட்சியின் திரு கவுரவ் கோகோய் குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி உரையாற்றிய போது சபாநாயகர் பல முறை குறுக்கிட்டதாக தெரிவித்தார். திரு ஓம் பிர்லா அவை நடவடிக்கைகளின் போது பாரபட்சமாக நடந்து கொண்டார் என்றும் இந்த தீர்மானம் அவருக்கு எதிரானதாக அல்லாமல் அவையின் கண்ணியத்தை பாதுகாக்கும் வகையில் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் திரு கோகோய் தெரிவித்தார்.

*மாநிலங்களவை*

மாநிலங்களவையில் இருந்து எதிர்கட்சி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர். இன்று காலை 11 மணிக்கு அவை கூடியதும் மத்திய அமைச்சர்கள் தங்கள் துறை சார்ந்த அறிக்கைகளை சமர்ப்பித்தனர். நாடாளுமன்ற குழுக்களின் அறிக்கைகளும் அவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பின்னர் பூஜ்ய நேரத்தில் திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு டெரிக் ஓ பிரையன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்து விவாதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். அவரைத் தொடர்ந்து எதிர்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதனால் ஏற்பட்ட கூச்சல், குழப்பத்திற்கு இடையே எதிர்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். அப்போது பேசிய அவை முன்னவர் திரு ஜேபி நட்டா எதிர்கட்சிகள் விவாதத்தை அவையினுள் நடத்த விரும்பவில்லை என்று தோன்றுவதாக குறிப்பிட்டார்.

*தேர்தல் ஆணையர்*

வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையிலான செயல்பாடுகளை தேர்தல் ஆணையம் ஒத்துக் கொள்ளாது என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் தெரிவித்துள்ளார். தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மேற்கு வங்கத்தில் 2 நாள் மறு ஆய்வுக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அச்சமோ அல்லது பாகுபாடோ

இல்லாமல் சட்டத்தின் ஆட்சியை உறுதியாக அமல்படுத்த சட்ட அமலாக்க முகமைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேற்கு வங்கத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலில் வன்முறை மற்றும் அச்சுறுத்தல் இல்லாத சூழ்நிலையில் வாக்களிப்பதை உறுதி செய்வதே தேர்தல் ஆணையத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது என்றார். வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிர திருத்தம் நிறைவடையும் தருவாயில் இருப்பதாகவும் தூய்மையான வாக்காளர் பட்டியல்கள் ஜனநாயகத்தின் அடித்தளம் என்றும் திரு ஞானேஸ்குமார் கூறினார்.

*பரிசளிப்பு விழா*

புதுச்சேரியில் சர்வதேச தேசிய மற்றும் மண்டல அளவில் பதக்கங்கள் விருதுகள் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பணப் பரிசு வழங்கும் விழா கம்பன் கலையரங்கில் இன்று நடைபெற்றது. விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஆகியோர் கலந்து கொண்டு விளையாட்டு வீரர்களுக்கு பணப் பரிசுகள் வழங்கினர்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு.............

(வாய்ஸ்)

இவ்விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பேசும் பொழுது விளையாட்டுத் துறையில் இந்தியா அடைந்திருக்கும் உயரம் சாதாரணமானது அல்ல என்றும் ஒலிம்பிக்ஸ், பாரா லிம்பிக்ஸ், காமன்

வெல்த் போன்ற சர்வதேச போட்டிகளில் தொடங்கி கிரிக்கெட் உலக கோப்பை வரை இந்தியாவின் பெருமையையும், திறமையையும் விளையாட்டு வீரர்கள் நிலை நிறுத்தி இருப்பதாக கூறினார். இந்த சாதனைகள் ஒரே நாளில் நடந்தவை அல்ல என்றும் விளையாட்டுத் துறையில் நமது இளைஞர்கள் செய்த தவத்தின் பலன் என்றும் தெரிவித்தார். விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசும்பொழுது புதுச்சேரியை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் தற்போது அதிக அளவில் பங்கேற்று பதக்கங்கள் பெற்று வருவதாக தெரிவித்தார். அவர்கள் வெளிநாடுகள் மற்றும் பிற மாநிலங்களில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செல்லும் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். இவ்விழாவில் 320 விளையாட்டு வீரர்கள் மற்றும் 63 பயிற்சியாளர்களுக்கு 1 கோடியே 35 லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் அளவிற்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், வேளாண் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாண சுந்தரம், திரு கே எஸ் பி ரமேஷ், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காரைக்கால்-குழுக் கூட்டம்

காரைக்கால் சுகாதாரத் துறை இணை இயக்குநர் டாக்டர் சிவராஜ்குமார் தலைமையில் இன்று கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தைக் கண்டறியும் தடை சட்டம் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காரைக்காலில் மேலும் 2 இடங்களில் புதிய ஸ்கேன் மையங்கள் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தை கண்டறிந்து கூறுவது சட்டப்படி குற்றம் என்பதால் இதனை மீறுபவர்கள் மீது 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இக்குழுக் கூட்டத்தில் அரசு மருத்துவ அதிகாரிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இண்டியன் ஆயில்

வீட்டு உபயோகத்திற்கும், மற்றும் மருத்துவனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசியமான பிற துறைகளுக்கும் தடையின்றி எரிவாயு சிலிண்டர் வழங்கும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இண்டியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள சமூக ஊடக பதிவில் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் போன்ற அத்தியாவசிய துறைகளிடம் இருந்து வரும் கோரிக்கைகள் பெட்ரோலிய விற்பனை நிறுவனங்களைச் சார்ந்த செயல்

இயக்குநர் அடங்கிய குழுவால் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

*பிசி சிஐ-பரிசு*

அண்மையில் நடந்து முடிந்த ஐசிசி ஆண்கள் டி-20 உலக கோப்பையை இந்திய அணி வென்றதை அடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 131 கோடி ரூபாய் ரொக்கப் பரிசை அறிவித்துள்ளது. இந்த பரிசுத் தொகை சூரிய குமார் யாதவ் தலைமையில் கோப்பையை வென்ற இந்திய அணியின் 15 வீரர்கள் பயிற்சி ஊழியர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று பிசி சிஐ செயலாளர் திரு தேவஜித் சைகியா தெரிவித்துள்ளார்.

*வானிலை*

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 5 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் வறண்ட வானிலையே நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் தென் தமிழக கடலோரப் பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நாளை வரை அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கும் என்றும் அதற்கு அடுத்த 3 நாட்களுக்கு அதிக பட்ச வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை திருச்சியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைக்க உள்ளார்.

பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்யும் வகையில் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955-ன் கீழ் கொண்டு வரப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லாவிற்கு எதிராக எதிர் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் இன்று மக்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

புதுச்சேரியில் சர்வதேச தேசிய மற்றும் மண்டல அளவில் விருதுகள் பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பணப் பரிசுகள் வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------